**சுருக்கம்**

மாற்றுத்திறனாளிகள் நலத் துறை – பார்வைத்திறன் குறைபாடுடையோர்களுக்கான பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களின் கற்கும் திறனை மேம்படுத்துதல் – கற்பிக்கும் கருவிகள் மற்றும் தொட்டுணரக்கூடிய புத்தகங்கள் (Universal Braillie kit and Tactile Book) அடங்கிய பெட்டி 2024–2025–ஆம் ஆண்டு முதல் ரூ.5000/– முதல் ரூ.10,000/– மதிப்பில் 430 மாணவர்கள் பயன்பெறும் வகையில் உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டம் – ரூ.34,50,000/– நிதி ஒப்பளிப்பு – வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந–2)த் துறை**

**அரசாணை (நிலை) எண்.12** **நாள்: 28.08.2024**

**குரோதி–ஆவணி–12,**

**திருவள்ளுவர் ஆண்டு, 2055.**

**படிக்கப்பட்டது :**

மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் அவர்களின் கடித
ந.க.எண்.002456/சிப1/2024, நாள்.26.06.2024.

******

**ஆணை:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 21.06.2024 அன்று சட்டமன்ற பேரவையில் 2024 – 2025–ஆம் ஆண்டிற்கான மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் மானிய கோரிக்கையின் போது இன்னபிறவற்றுடன் கீழ்கண்ட அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:–

> **"பார்வைத்திறன் குறைபாடுடைய அரசு பள்ளி மாணவ / மாணவியர்களின் கற்கும் திறனை மேம்படுத்த கற்பிக்கும் கருவிகள் மற்றும் தொட்டுணரக்கூடிய புத்தகங்கள் (Universal Braillie kit and Tactile Book) அடங்கிய பெட்டி ரூ.5,000/– முதல் ரூ.10,000/– மதிப்பில் 430 மாணவர்கள் பயன்பெறும் வகையில் ரூ.34.50 இலட்சம் செலவில் வழங்கப்படும்.**

2. பார்வையில் காணும் கடிதத்தில், மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் அவர்கள் மேற்காணும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, பார்வைத்திறன் குறைபாடுடைய அரசு பள்ளி மாணவ / மாணவியர்களின் கற்கும் திறனை மேம்படுத்திட 1–ஆம் வகுப்பு முதல் 5–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு கற்பிக்கும் கருவிகள் மற்றும் தொட்டுணரக்கூடிய புத்தகங்கள் (Universal Braille Kit and Tactile Book) அடங்கிய பெட்டி ரூ.5000/– மதிப்பில் 170 மாணவர்கள் பயன்பெறும் வகையில்

ரூ.8.50 இலட்சம் (170x5000 = 8,50,000) செலவிலும், 6–ஆம் வகுப்பு முதல் 10–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு அறிவியல், கணிதம், வரலாறு மற்றும் புவியியல் வரைபட புத்தகங்கள் தொட்டுணரக்கூடிய வடிவில் ரூ.10,000/– மதிப்பில் 260 மாணவ / மாணவியர்களுக்கு ரூ.26.00/– இலட்சம் செலவிலும் வழங்கப்படும் என்றும், இத்திட்டத்தினால், ஆரம்ப பள்ளி மாணாக்கர்களின் பிரெய்லி எழுது திறனை மேம்படுத்தவும் மற்றும் அனைத்து மாணாக்கர்களும் கணிதம், அறிவியல், வரலாறு மற்றும் புவியியல் புத்தகங்களை தொடு உணர்வுடன் அறிந்து படிக்கும் திறன் மேம்படும், என்றும் தெரிவித்துள்ளார்.

3. எனவே, பார்வைத்திறன் குறைபாடுடையோர்களுக்கான அரசு பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்கள் கற்கும் திறனை மேம்படுத்திடும் வகையில், கீழே தெரிவிக்கப்பட்டவாறு, 1–ஆம் வகுப்பு முதல் 5–ஆம் வகுப்பு வரை பயில்பவர்களுக்கு ரூ.5000/– மதிப்பிலான கற்பிக்கும் கருவிகள் மற்றும் தொட்டுணரக்கூடிய புத்தகங்கள் (Universal Braille Kit and Tactile Book) அடங்கிய பெட்டி 170 பார்வைத்திறன் குறைபாடுடைய மாணவ / மாணவியர்கள் பயன்பெறும் வகையில் ரூ.8.50 இலட்சம் (170x5000 = 8,50,000) செலவிலும் 6–ஆம் வகுப்பு முதல் 10–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு அறிவியல், கணிதம், வரலாறு மற்றும் புவியியல் வரைபட புத்தகங்கள் தொட்டுணரக்கூடிய வடிவில் ரூ.10,000/– மதிப்பில் 260 மாணவ / மாணவியர்களுக்கு ரூ.26.00 இலட்சம் (260 x10,000 = 26,00,000) செலவிலும் மொத்தம் ரூ.34.50 இலட்சம் மதிப்பில் இத்திட்டத்தினை செயல்படுத்திட நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு அரசினை கோரியுள்ளார்.

| வ. எண் | வகுப்பு | உபகரணம் |
|---|---|---|
| 1 | 1 முதல் 5 வரை | i. Tactile Materials related to text books<br>ii. Universal Braille Kit (Braille Slate, Stylus, English & Tamil Trainer Plate, Geometry Set, White Cane (four fold), Word Block (5), Cube, Tracer Wheel, Paper (20) Taylors Frame, Abacus, Type sets, Manual, Back pack with adjustable shoulder straps and Velcro closure)<br>iii. User Guide Booklet |
| 2 | 6 முதல் 10 வரை | Tactile Materials related to text books (Science, Maths, History and Geography) |

4. மேற்காணும் சூழ்நிலையில், மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின் செயற்குறிப்பினை நன்கு பரிசீலித்த அரசு அதனை ஏற்று பார்வைத்திறன் குறைபாடுடையோருக்கான அரசு பள்ளிகளில் கல்வி பயிலும் மாணவ / மாணவியர்களின் கற்கும் திறனை மேம்படுத்திட ஏதுவாக, 2024–2025–ஆம் நிதியாண்டு முதல், மேலே பத்தி 3–ல் காணும் அட்டவணையில் தெரிவிக்கப்பட்டவாறு 1–ஆம் வகுப்பு முதல் 5–ஆம் வகுப்பு வரை பயிலும் 170 மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில் கற்பிக்கும் கருவிகள் மற்றும் தொட்டுணரக்கூடிய புத்தகங்கள் (Universal Braille Kit and Tactile Book) அடங்கிய ரூ.5,000 மதிப்பிலான பெட்டிகள் 170 எண்ணிக்கையில் வழங்கிட ரூ.8.50/– இலட்சமும் மற்றும் 6–ஆம் வகுப்பு முதல் 10–ஆம் வகுப்பு வரை பயிலும் 260 பார்வை மாற்றுத்திறன் மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில் அறிவியல், கணிதம், வரலாறு மற்றும் புவியியல் பாடங்களை தொட்டுணரக்கூடிய வகையில் ரூ.10,000/–மதிப்பிலான வரைபட புத்தகங்கள் 260 எண்ணிக்கையில் வழங்கிட ரூ.26.00 இலட்சமும், ஆக மொத்தம் 430 மாணாக்கர்கள் இத்திட்டத்தில் பயன்பெற்றிட ரூ.34,50,000/– (ரூபாய் முப்பத்திநான்கு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் பின்வரும் கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

> **"2235 – சமூகப் பாதுகாப்பு நலனும் – 02 – சமூக நலன் – 101 – மாற்றுத்திறனாளிகள் நலன் – மாநிலச் செலவினங்கள் – AA – பார்வையற்றோர் பள்ளி – 368 – புத்தகங்கள், நோட்டுப்புத்தகங்கள், சிலேட்டுகள் முதலியவற்றிக்காகும் செலவு – 01 – புத்தகங்கள், நோட்டுப்புத்தகங்கள், சிலேட்டுகள் முதலியவற்றிக்காகும் செலவு" (த.தொ.கு.2235 – 02 – 101 – AA – 36801)**

6. மேலே பத்தி 4–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினத் தொகை ரூ.34,50,000/– 2024–2025–ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும், எனினும் 2024–2025–ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் ஒரு குறிப்பிட்ட தொகையினை சேர்ப்பதன் மூலம் இச்செலவினம் சட்டப் பேரவையின் பார்வைக்கு கொண்டு செல்லப்படும். அவ்வாறு நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி 4–ல் அனுமதிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

மேலும் 2024-2025-ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கம் மற்றும் துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் / வரைவு விளக்கக் குறிப்பினையும் தவறாது நிதி (சந)/வ.செ.பொ-I) துறைக்கு உரிய நேரத்தில் அனுப்பி வைக்குமாறு மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. மேலும், இந்நேர்வில் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்த புள்ளி சட்டம் 1998 படியும் (Tamil Nadu Transparency in Tender Act-1998) மற்றும் நடைமுறையில் உள்ள விதிகள் படியும் இத்திட்டத்திற்கான கருவிகள் மற்றும் புத்தகங்கள் கொள்முதல் செய்யப்பட வேண்டுமென மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரை அறிவுறுத்தப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்: 960/நிதி(சந)/2024, நாள்.28.08.2024 மற்றும் கூடுதல் நிதியொதுக்கம் பேரேடு எண்.0687 (அறுநூற்று எண்பத்தி ஏழு) (IFHRMS ASL No.2024080687)-ல் பெறப்பட்ட ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சிஜி தாமஸ் வைத்யன்
அரசு செயலாளர்

பெறுநர்
மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர், சென்னை-5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
(மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம்,
(மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் வழியாக)
முதன்மை மாநில கணக்காயர், சென்னை-18.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-35.

<u>நகல்:-</u>
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
நிதி (ச.ந/வ.செ.பொது-I&II/வ.வ-I)த் துறை, சென்னை-9.
செயலாளரின் தனிச் செயலாளர்,
மாற்றுத்திறனாளிகள் நலத் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்
29.08.2024